# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, ஒகத்து மாதம் 24 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 12.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

# 2007 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. (கூட்) 24/2005

## ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

முன்னுரை.

"ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றம்" என அழைக் கப்படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் நீர்கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட கழகத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண் ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே கல்வி அபிவிருத்தி மன்றத்தின் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய் யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்க ளும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்க ளாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தா பனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு அது

வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற்கு அவர்களை இயலச் செய் வதற்கு பரிசில், புலமைப்பரிசில் மற்றும் உதவிகள் அளித்தல், ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமூகமளிப்ப தற்கு அவர்களை ஊக்குவித்தல், அவர்களின் கல்வி, கலாசார மற்றும் அறிவியல் செயற்பாடுகளுக்கு உதவு தலும் ;அத்துடன் நிரந்தர மற்றும் நடமாடும் நூல் நிலையங்களைத் தாபித்தலும் ;

(ஆ) பாடசாலைச் சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் கருத்தரங்குகள், செயல மர்வுகள், விரிவுரைகள், கண்காட்சிகள், போட்டிப் பரீட்சைகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங் கமைத்தல், அவர்களது விளையாட்டுத் திறமைக ளையும், கலைத் திறமைகளையும் மேம்படுத்தும் நோக்கில் போட்டிகளையும், பயிற்சி முகாம்களையும் கொண்டு நடாத்தல் அத்துடன் திறமை வாய்ந்த சிறுவர்களுக்கு பரிசில் மற்றும் சான்றிதழ்களை அளித் தலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக்களுக் கான உதவிகளை வழங்குதல் உட்பட ஒவ்வொரு நட வடிக்கையும் எடுத்தல் ;

(இ) பரிசில்களை வழங்குதல் மற்றும் செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும் ஒழுங்கமைத்தல் அத்துடன் பாட சாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேவைக ளைப் பாராட்டுவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் மற் றும் அவர்களது உயர்தொழில் அறிவை மேம்படுத்து வதற்குமான நோக்கில் கடன் திட்டங்களையும், வேறு உதவிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ஈ) பாடசாலையிலிருந்து விலகியவர்களின் கலை உருவாக்கம், விளையாட்டுத் திறமை மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் மற்றும் கணணி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் கல்வியைத் தொடர்வதற்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையங்களையும் உருவாக்குதலும், உதவிகளை வழங்குதலும் அத்துடன் அத்தகைய கற்கைகளை வழங்குவதற்கென நிறுவனங்களைத் தாபித்தலும் ;

(உ) பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதவதன் மூலம் உதவியளித்தலும், தொழிலற்ற பிரசைகளுக்காக சுயதொழில் வாய்ப்புக்களைத் தாபித்தலும், கடன்கள் வழங்குதலும், அத்துடன் பலதரப்பட்ட சேமிப்புத் திட்டங்களை ஆரம்பித்தலும் ;

(ஊ) வறிய சிறுவர்களின் ஆரம்ப, இளம்பராய அபிவிருத்திக்கான முன்னிலைப் பாடசாலைகளை ஆரம்பித்தலும், பராமரித்தலும் முதியோர்கள், பாடசாலைச் சிறுவர்கள், பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கென பலதரப்பட்ட மொழிகளிலும், பலதரப்பட்ட விடயங்களிலும் வகுப்புகளைத் தொடங்குதலும், பேணிவருதலும், அத்துடன் வேறு வசதிகளை அவர்களுக்கு ஏற்பாடு செய்தலும் ;

(எ) சொந்தக் காணிகள் அற்ற குடும்பங்களுக்குக் காணிகளையும், வீடுகளையும் வழங்குதல், நீர்ப்பற்றாக்குறை உள்ள பிரதேசங்களில் நீர்வழங்கல் திட்டங்களை ஆரம்பித்தல், வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களைத் தடுப்பதற்கும், குறைப்பதற்குமான நடவடிக்கை எடுத்தல், குறைந்த வசதிகளையுடைய பாடசாலைகளுக்கு கட்டடிங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அத்தகைய பாடசாலைகளுக்கு வேறு தேவைகளை வழங்குதலும் மற்றும் வீதிகள், மின்சாரம் மற்றும் சுகாதாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைப் பலதரப்பட்ட பிரதேசங்களிலும் ஏற்பாடு செய்தலும் ;

(ஏ) இனம், மதம் அல்லது சாதி பற்றிய ஏதேனும் குறிப்பீடுகள் இன்றிக் கல்வி, மத, கலாசார, கலைசார் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்தியில் உதவுதல் அத்துடன் பலதரப்பட்ட விழாக்கள் மற்றும் போட்டிகளை நடாத்துதல்;

(ஐ) வறிய, கைவிடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆட்களுக்கான மருத்துவ நிவாரணங்கள் மற்றும் உணவுகளை வழங்குதல், இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் முதியோர்களுக்கான வீடுகளைத் தாபித்தலும், பராமரித்தலும் சிறுவர் இல்லங்கள் அமைத்தலும் அத்துடன் சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கான நாள் கவனிப்பு நிலையங்களைத் தாபித்தலும், பராமரித்தலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கில் கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், செயலமர்வுகள், பட்டிமன்றங்கள், குழுக்கலந்துரையாடல்கள், சுற்றுலாக்கள், களிப்பூட்டும் சுற்றுலாக்கள் அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளை மேம்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்கமைத்தல், அத்துடன் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திக் குறிப்புக்கள் மற்றும் புதினத்தாள்கள் என்பவற்றைப் பிரசுரித்தல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ;

(ஓ) இடைத் தங்கல் வீடுகளைத் தாபித்துப் பேணுவதன் மூலம் குருடர்கள், செவிடர்கள் மற்றும் வயோதிபர்களுக்கென வசதிகளை ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஔ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தலும், ஒத்துழைத்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்பது பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதி

களுக்கிணங்கத் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபை ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும் .

(2) மன்றத்தின் தாப உறுப்பினரான கௌரவ அமைச்சர் ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே பணிப்பாளர்கள் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர், தவிசாளராகப் பதவியை வகிக்கின்ற ஆளின் மூத்த பிள்ளை பணிப்பாளர்கள் சபையின் அடுத்த தவிசாளராக வருதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர், இறப்பினால், பதவி விலகலால், முன்னதாகவே தமது பதவி வெற்றிடமானாலொழிய, நான்கு ஆண்டுகாலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையின் இறப்பின் அல்லது பதவி விலகலின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, புதிய உறுப்பினர் ஒருவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புதிய உறுப்பினர் நான்கு ஆண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்

பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற் கும், மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்க ளிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையா தோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்க ளுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத் தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர் களை அனுமதித்தலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலகுதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர்கள் சபையின தும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற் றின் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறை கள், அத்தகைய கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் மற்றும் அவர்களது தத்துவங்களையும், கடமைக ளையும் பிரயோகித்தலும், புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தின தும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள் ; அத் துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ;

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்ற அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான கடன்கள்.*

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது செலுத்தப்படற்பால தான சந்தாப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப்பணங்களும் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத் துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின்

ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்து வத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத் தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதி யாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணங்களாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகை யைச் செலுத்துவதற்கு ஆளாகலாகாது.

*கலைக்கப் பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனம் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப் பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக் குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு நேர் முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**12.** (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டுச் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றி முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் வேறு அலுவலகரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. *குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்